SALCO
South Asian Legal Clinic of Ontario

# வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவரின் பொறுப்பேற்றல் செயன்முறை மூலம் நிரந்தரக் குடியிருப்பாளராகுதல்

## வாழ்க்கைத் துணைவர் (spouse) அல்லது கூடி வாழ்பவருக்கான (partner) பொறுப்பேற்றல் செயன்முறை (sponsorship) என்றால் என்ன?

கனடாவில் நிரந்தரக் குடியிருப்பாளர் தகுதியைப் பெற்றுக்கொள்ளச் சில வழிமுறைகள் உள்ளன. வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவரின் பொறுப்பேற்றல் செயன்முறை அவற்றில் ஒன்றாகும். நீங்கள் திருமணமானவராக அல்லது திருமண உறவில் இருப்பதுடன், உங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவர் கனேடியப் பிரஜையாக அல்லது நிரந்தரக் குடியிருப்பாளராக (PR) இருந்தால், நீங்களும் நிரந்தரக் குடியிருப்பாளர் ஆகுவதற்கான பொறுப்பையேற்க (sponsor) அவர் விண்ணப்பிக்க முடியும்.

## வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவர் என்பவர் யார்?

- **வாழ்க்கைத் துணைவர்:**
  உங்களைப் பொறுப்பேற்பவரை நீங்கள் திருமணம் செய்துள்ளீர்கள், உங்கள் திருமணம் உங்கள் சொந்த நாட்டிலும் கனடாவிலும் சட்டபூர்வமானது

- **கூடி வாழ்பவர்:**
  - **பொதுச்-சட்டப்படி கூடி வாழ்பவர் (Common-Law partner):** நீங்களும் உங்களைப்

பொறுப்பேற்பவரும் குறைந்தது ஒரு வருடமாவது திருமணத்தை-ஒத்த உறவில் ஒன்றாக வாழ்ந்தீர்கள்

- **திருமணத் துணை (Conjugal partner):** உங்களைப் பொறுப்பேற்பவருடன் நீங்கள் திருமணத்தை-ஒத்த உறவில் குறைந்தது ஒரு வருடமாவது இருக்கிறீர்கள், ஆனால் உங்கள் கட்டுப்பாட்டில் இல்லாத காரணங்களுக்காக உங்களால் ஒருமித்து வாழ முடியவில்லை

**கனேடியக் குடிவரவு, அகதிகள் மற்றும் குடியுரிமை அமைச்சின் (Immigration, Refugees and Citizenship Canada - IRCC) கீழ் வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவருக்கான இரண்டு வகையான பொறுப்பேற்றல் திட்டங்கள் உள்ளன.**

- **குடும்ப வகுப்பு (Family Class)** (நீங்கள் கனடாவுக்கு வெளியே வசிக்கும் ஒரு வாழ்க்கைத் துணைவர், பொதுச்சட்டப்படி  கூடி வாழ்பவர் அல்லது திருமணத் துணையாக இருந்தால்)

- **வாழ்க்கைத் துணைவர் அல்லது பொதுச்-சட்டப்படி கூடி வாழ்பவருக்கான கனேடிய வகுப்பு (Spouse or Common-Law Partner in Canada Class)**(நீங்கள் உங்களைப் பொறுப்பேற்பவருடன் கனடாவில் வசிக்கும் வாழ்க்கைத் துணைவர் அல்லது பொதுச்சட்டப்படி கூடி வாழ்பவராக இருப்பதுடன், ஒருவகைத் தற்காலிகக் குடியுரிமை பெற்றவராக இருந்தால்)

பொறுப்பேற்றல் நடைமுறைக்குத் தகுதி பெறுவதற்கு நீங்களும் உங்களைப் பொறுப்பேற்பவரும் சில வகையறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

SALCO
South Asian Legal Clinic of Ontario

## பொறுப்பேற்கப்படக் (ஸ்பொன்சர் செய்யப்படக்) கூடியவர் யார்?

**பின்வருபவர்களில் ஒருவராக இருந்தால் நீங்கள் பொறுப்பேற்கப்படலாம்:**

- நீங்கள் ஒரு வாழ்க்கைத் துணைவர், பொதுச்சட்டப்படி கூடி வாழ்பவர் அல்லது திருமணத் துணைவர்
- நீங்கள் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்
- நீங்கள் கனடாவில் வாழ உத்தேசித்துள்ளீர்கள்
- உங்களைப் பொறுப்பேற்பவருடன் நீங்கள் உண்மையாகவே ஒரு உறவுமுறை வைத்திருக்கிறீர்கள் (குடியேற்ற நோக்கத்துக்காக  அல்ல)

## பொறுப்பேற்பவராக (ஸ்பொன்சர் செய்பவர்) இருக்கக் கூடியவர் யார்?

**உங்களுக்குப் பின்வரும் தகுதிகள் இருந்தால் நீங்கள் பொறுப்பேற்பவராக  இருக்க முடியும்:**

- ஆகக் குறைந்தது 18 வயதாவது பூர்த்தியடைந்தவர்
- கனேடியப் பிரஜை அல்லது நிரந்தரக் குடியிருப்பாளர்
- கனடாவில் வசிப்பவர் (கனேடியக் குடிமக்களுக்கு இதில் விதிவிலக்கு உண்டு: அவர் கனடாவுக்கு வெளியே வசிப்பவராக இருந்தால், அவர் பொறுப்பேற்கும் நபர் PR ஆனதும் அவர்கள் கனடாவில் வாழத் திட்டமிட்டிருப்பதைக் காட்ட வேண்டும்)
- பொறுப்பேற்கப்படும் நபருடன் உண்மையாகவே ஒரு உறவுமுறை வைத்திருப்பவர் (குடியேற்ற நோக்கத்துக்காக  அல்ல)

• அவர் பொறுப்பேற்க விரும்பும் நபரின் அடிப்படைத் தேவைகளை அவர்களால் வழங்க முடியும் என்பதைக் காட்டக்கூடியதாக இருக்க வேண்டும்

கவனிக்கவும்: கனடாவில் நிரந்தரக் குடியிருப்பாளர் ஆகுவதற்கு நீங்கள் ஒரு பாதுகாப்புச் சோதனையை (security check) மேற்கொண்டு அதில் சித்தியெய்தல் வேண்டும். நீங்கள் மருத்துவப் பரிசோதனை முடிவுகளையும் வழங்க வேண்டும், ஆனால் நீங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது பொதுச்சட்டப்படி கூடி வாழ்பவர் எனும் வகுப்பின் கீழ் விண்ணப்பித்தால் மருத்துவக் காரணங்களுக்காக அது நிராகரிக்கப்பட முடியாது.

## பொறுப்பேற்பவராக (ஸ்பொன்சர் செய்பவர்) இருக்க முடியாதவர் யார்?

**பின்வரும் நிலைமைகள் இருந்தால் ஒரு நபர் பொறுப்பேற்பவராக இருக்க முடியாது:**

• அவர் சில குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றிருந்தால் (பாலியல் குற்றங்களைச் செய்திருத்தல், அதற்கு முயற்சி செய்திருத்தல் அல்லது செய்யப் போவதாக அச்சுறுத்தியிருத்தல், அதிகபட்சமாக 10 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் வன்முறைக் குற்றங்கள் புரிந்திருத்தல், அவர்களது உறவினர்கள்/குடும்ப உறுப்பினர்களுக்கு உடல்ரீதியாகத் தீங்கு விளைவித்த குற்றங்கள்)
• அவருக்கு அகற்றல் கட்டளை ஒன்று இருந்தால்
• அவர் சிறையில் இருந்தால்
• அவர் இயலாமை காரணமாக அல்லாது

அரசாங்கத்திடமிருந்து சமூக உதவி அல்லது சமூக நலனைப் (உதாரணமாக, Ontario Works) பெற்றுக்கொண்டிருந்தால்

- அவரே வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவரால் பொறுப்பேற்புச் செய்யப்பட்டு 5 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்துக்கு முன்புதான் நிரந்தரக் குடியுரிமை பெற்றவராக இருந்தால்
- அவருக்குப்  பின்வருவன போன்ற சில கடன்கள் அல்லது நிதிப் பொறுப்புகள் இருந்தால்:
    - o அவர் பொறுப்பேற்புச் செய்த முன்னாள் வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவருக்கு அவர் தொடர்ந்தும் நிதியுதவிப் பொறுப்பாளராக இருத்தல்
    - o அவர் செலுத்த வேண்டிய வாழ்க்கைத் துணைவருக்கான அல்லது சிறுவருக்கான நிதியாதரவைச் செலுத்தாமல் இருத்தல்
    - o IRCC யிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தாமல் இருத்தல்
    - o அவரால் முன்பு பொறுப்பேற்புச் செய்யப்பட்ட வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழ்பவர் பெற்ற சமூகநல உதவியைத் திருப்பிச் செலுத்தாமல் இருத்தல்
    - o அவர் வங்குரோத்து நிலைக்கு விண்ணப்பித்து அதிலிருந்து விடுவிக்கப்படாமல் இருத்தல்

**குறிப்பு:** உங்களுக்கு வருமானம் இல்லை என்றாலும், வாழ்க்கைத் துணைவர்/பொதுச் சட்டத் துணைவர்/கூடி வாழ்பவருக்குரிய  பொறுப்பேற்றலின் கீழ், வாழ்க்கைத் துணைவர் ஒருவரை நீங்கள் பொறுப்பேற்க முடியும். (இந்த வகையான பொறுப்பேற்றலுக்கு வருமானம் எதுவும் காட்ட

SALCO
South Asian Legal Clinic of Ontario

வேண்டிய தேவை இல்லை). இருப்பினும், நீங்கள் சமூகநல உதவியில் தங்கியிருக்கக்கூடாது.

## பொறுப்பேற்றல் கையேற்பு (Sponsorship Undertaking):

பொறுப்பேற்பது (ஸ்பொன்சர் செய்வது) என்பது நீங்கள் PR ஆன பிறகு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உங்கள் வாழ்க்கைத் துணைவர் அல்லது கூடி வாழும் துணைவர் உங்களுக்கு நிதி ரீதியாக ஆதரவளிப்பதாக உறுதியளிப்பதாகும். இது ஒரு "கையேற்பு" என அழைக்கப்படுகின்றது. வாழ்க்கைத் துணைவர்கள் மற்றும் கூடி வாழும் துணைவர்களுக்கு, நீங்கள் PR ஆகும் நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு நிதிரீதியாக உங்களைக் கவனித்துக்கொள்வதாக உங்களைப் பொறுப்பேற்பவர் உறுதியளிக்க வேண்டும். உங்களுக்குப் பிள்ளைகள் இருந்தால், பிள்ளைகள் PR ஆகும் நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு அல்லது அவருக்கு 25 வயதாகும் வரை (எது முன்னராக வந்தாலும்). அந்தக் காலகட்டத்தில் நீங்கள் அல்லது உங்கள் பிள்ளைகள் சமூகநல உதவி அல்லது சமூகநலனில் தங்கியிருந்தால், உங்களைப் பொறுப்பேற்பவர் அந்த பணத்தை அரசாங்கத்திற்குத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

## விண்ணப்பிப்பது எப்படி

இந்த விண்ணப்பத்தைத் தற்போது இணையத்தில் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். இயலாமை அல்லது பிற காரணங்களால் இணையத்தில் விண்ணப்பிக்க முடியாவிட்டால், IRCC இலிருந்து அச்சிடப்பட்ட காகித விண்ணப்பத்தைக் கோரலாம்.

SALCO
South Asian Legal Clinic of Ontario

1. பொறுப்பேற்பவராக (ஸ்பொன்சராக) ஆகுவதற்கு உங்களைப் பொறுப்பேற்பவர் விண்ணப்பப் படிவம் ஒன்றை நிரப்ப வேண்டும். நீங்களும் உங்களைப் பொறுப்பேற்பவரும் இந்த விண்ணப்பத்தில் மின்னணு முறையில் (electronically) கையொப்பமிட வேண்டும். உங்களைப் பொறுப்பேற்பவர் நிரப்ப வேண்டிய மேலதிகமான படிவங்களும் இங்கு உள்ளன.
2. உங்களைப் பொறுப்பேற்பவர் அவரின் படிவங்களின் மின்னணுப் பிரதிகளை (electronic copies) உங்களுக்கு வழங்க வேண்டும், இதன் மூலம் நீங்கள் அதை உங்கள் இணையத்தள விண்ணப்பத்தில் பதிவேற்றலாம். நீங்கள் முதன்மை விண்ணப்பதாரராக உங்களுடைய சொந்தப் படிவங்களைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும். விண்ணப்பம் முழுவதிலும் நீங்கள் கையொப்பமிட வேண்டும்.
3. நீங்கள் (முதன்மை விண்ணப்பதாரர்) நிரந்தரக் குடியிருப்பாளர் தளம் (Portal) என அழைக்கப்படும் விண்ணப்பத்துக்கான தளத்தில் இணையத்தளக் கணக்கு (online account) ஒன்றை உருவாக்கி, நிரந்தரக் குடியிருப்பாளருக்கான சரியான படிவங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும்.
4. IRCC இணையதளத்தில் விரிவான பயன்பாட்டு வழிகாட்டி உள்ளது. அத்துடன், நீங்கள் வழங்க வேண்டிய அனைத்தையும் குறித்து அறிந்திருப்பதை உறுதிப்படுத்த ஆவணங்களின் சரிபார்ப்புப் பட்டியலையும் அது வழங்குகிறது.
குறிப்பு: நீங்கள் வசிக்கும் இடத்தைப் பொறுத்து உங்கள் நாட்டிற்கெனக் குறிப்பிடப்படும் மேலதிகப் படிவங்களை நிரப்ப வேண்டியிருக்கும். நாடு சார்ந்த படிவங்களுக்கு IRCC இன் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.
5. இந்தப் படிவங்களுடன், நீங்களும் உங்களைப் பொறுப்பேற்பவரும் ஆதார ஆவணங்களையும் வழங்க வேண்டும். உதாரணமாக, உங்களைப் பொறுப்பேற்பவரின் கனேடிய அந்தஸ்துக்குரிய சான்று, வருமானத்துக்குரிய

SALCO
South Asian Legal Clinic of Ontario

சான்று போன்றன. அத்துடன் அடையாள ஆவணங்கள், காவற்துறைச் சான்றிதழ்கள் மற்றும் உங்களின் உறவுமுறைக்குச் சான்றுகளாகத் திருமணப் புகைப்படங்கள், மின்னஞ்சல்கள், உரைகள், கடிதங்கள் போன்றவற்றையும் வழங்க வேண்டும்.
6. விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தவும்.
7. விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும்.

## கட்டணங்கள் (Fees)

நீங்கள் கனடாவிற்குள்ளேயோ அல்லது வெளியிலேயோ இருந்துகொண்டு பொறுப்பேற்புச் செய்யப்பட்டாலும், இந்தக் கட்டணத்தில் செலுத்த வேண்டிய மூன்று பகுதிகள் உள்ளன. விண்ணப்பத்தில் எத்தனை பிள்ளைகள் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பதைப் பொறுத்துக் கூடுதலான கட்டணம் செலுத்த வேண்டும்.

1. பொறுப்பேற்றல் செயன்முறைக் கட்டணம் (Sponsorship fee - $75) – விண்ணப்பத்துடன் செலுத்தப்பட வேண்டும்
2. முதன்மை விண்ணப்பதாரருக்கான செயன்முறைக் கட்டணம் ($490) – விண்ணப்பத்துடன் செலுத்தப்பட வேண்டும்
3. நிரந்தர வதிவிட உரிமைக் கட்டணம் ($515) – விண்ணப்பத்துடன் அல்லது அதற்குப் பின்னர் செலுத்தப்படலாம்
4. விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள உங்களைச் சார்ந்திருக்கும் பிள்ளைகளுக்கான கட்டணங்கள் - ஒவ்வொரு பிள்ளைக்கும் $155 வீதம் கட்டணம் செலுத்த வேண்டும்.

SALCO
South Asian Legal Clinic of Ontario

**எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் என்ன நடக்கும்?**

உங்கள் வெளிநாட்டு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால், குடிவரவு மற்றும் அகதிகள் சபையின் (Immigration and Refugee Board - IRB) மேன்முறையீட்டுப் பிரிவில் (IAD) மேன்முறையீடு செய்யலாம். IRB என்பது குடிவரவு மற்றும் அகதிகள் குறித்த வழக்குகளில் முடிவுகளை எடுக்கும் ஒரு தீர்ப்பாயமாகும். உங்கள் விண்ணப்பம் ஏன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதனை உங்களைப் பொறுப்பேற்பவர் அல்லது அவரது வழக்கறிஞர் விளக்கலாம். உங்களைப் பொறுப்பேற்பவருக்கு, இந்த மேன்முறையீட்டு நடைமுறையைத் தொடங்குவதற்கு, உங்கள் நிராகரிப்புக் கடிதத்தைப் பெற்ற திகதியிலிருந்து 30 நாட்கள் உள்ளன.

வாழ்க்கைத் துணைவர்/அல்லது பொதுச்சட்டப்படி கூடி வாழும் துணைவர் ஒருவருக்கான விண்ணப்பத்தின் கீழ்க், கனடாவுக்குள் வைத்து நீங்கள் விண்ணப்பித்திருந்தால், IAD (IRB) க்கு மேன்முறையீடு செய்ய உங்களுக்கு அனுமதி இல்லை. மத்திய அரசாங்க நீதிமன்றத்தில் நீதித்துறை மறுஆய்வுக்கான விண்ணப்பத்தை மட்டுமே நீங்கள் செய்ய முடியும்.